மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது 17—12—1971 அன்று வழங்கப்பட்ட பட்டியல். இதிலே வைகையாற்றிலே வீரச்செயல் புரிந்தவர்களின் பட்டியல் இடம் பெறவில்லை என்று கருதுகிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, காவலர்களில் வீரச்செயல் செய்தவர்களுக்குப் பாராட்டுகளும், விருதுகளும் தருகின்றோம். அது பாராட்டுதற்குரிய ஒன்றுதான். அதில் பல நேரங்களில் அவர்கள் உயிரையே தியாகம் செய்யவேண்டியிருப்பதால் அரசாங்கமே அத்தகையவர்களுக்குக் கட்டாய இன்ஷ்யூரன்ஸ் செய்து அந்தப் பணத்தை அரசாங்கம் போட்டு அவர்களுக்கு உதவி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நல்ல யோசனை.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்த விருது பெற்றவர்களில் நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர், பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் படித்த பட்டியல் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்ததுதான்.

* 719 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970-ம் ஆண்டில் தமிழகத்தில் தீரச் செயல்களுக்காக ராஷ்டிர பதியின் விருது வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இரண்டு.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அவர்கள் யார் யார்? எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற விபரம் அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதைக் கூடக் கேட்காமல் போய்விடுமோ என்று பயந்தேன். அவர்களுடைய பெயர்கள் விளம்பரமாவது நல்லது. அதிலே ஒருவருடைய பெயர் திரு. ஆர். சேது ராமன். தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் உள்ள உள்ளூர் உயர்நிலைப் பள்ளி ஒன்றில் படிக்கும் 14 வயது மாணவன் திரு. கோவிந்தராஜ் என்னும் திலீப்குமார் 2—9—1967-ம் நாள் காவிரி ஆற்றில் மூழ்கிவிட்ட நிலைமையில் இருந்தபோது மேற்படி நகரில் அரசினர் கல்லூரியில் அப்போது மூன்றாவது ஆண்டு

1972 மார்ச் 27]

பி.எஸ்.ஸி. வகுப்பில் படித்து வந்த கல்லூரி மாணவர் திரு. ஆர். சேதுராமன் ஆற்றில் குதித்து தமது உயிருக்கு நேரக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாது அவரைக் காப்பாற்றினுர். இவரது தீரச் செயலுக்காக அவருக்கு உயிர் பாதுகாப்புப் பதக்கம் அளிக்கப் பட்டது.

இன்னொரு நிகழ்ச்சியில் உயிர் பாதுகாப்புப் பதக்கம் பெற்றவர்கள் திருவாளர்கள் ஏ. ஜெயசீலன், தமிழ்மணி ஆகியோராவர். தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடியிலுள்ள தேசிய உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த திரு. ஜெயசீலன், தமிழ்மணி ஆகிய இருவரும் அவ்வூரில் உள்ள பாமணியாற்றில் மூழ்கிக் கொண்டிருந்த விஜயலட்சுமி என்ற 40 வயது பெண்ணைத் தமது உயிருக்கு நேரக்கூடிய ஆபத்தையும் பொருட் படுத்தாது தீரத்துடன் ஆற்றில் குதித்துக் காப்பாற்றினர். இவர்களைப் பாராட்டி ஒவ்வொருவருக்கும் உயிர் பாதுகாப்புப் பதக்கம் அளிக்கப்பட்டது.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழகத்திலே வீரச் செயல் புரிந்தவர்களில் ஒருசிலரைத் தேர்ந்தெடுத்து மத்திய அரசுக்கு அனுப்பப்படுகின்ற எல்லோரையுமே ஏற்றுக் கொண் டுபாராட்டு விருது அளிக்கப்படக் கூடிய வகையில் முறையை வகுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பரிந்துரை செய்யப்படுபவர் கள் அனைவரையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. 40 பெயர்களைப் பரிந்துரை செய்தால் 20 பெயர்களை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். சென்ற வருஷம் 20, 22 பேர் அனுப்பப்பட்டு 10 பேரை ஏற்று கொண்டார்கள். அனைவரையும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கோருகிற அதிகாரம் நமக்கு இல்லை. நாம் அனுப்புவதற்குப் பெயரே பரிந்துரைதான்.

திரு. கோவை செழியன் : சில ஆண்டுகளுக்கு முன்னால் டில்லியில் பெருந்தலைவர் காமராஜ் அவர்களைத் தாக்குவதற்கு ஒரு கூட்டம் போனபோது தமிழகத்தைச் தேர்ந்த ஒரு வீரன் அவர் உயிரைக் காப்பாற்றுவதற்காகப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். அவர் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் அவருக்கு விருது வழங்க ராஷ்டிரபதிக்குச் சிபாரிசு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவருடைய பெயர் கோதண்டபாணி. அதைச் சொன்னதே அவருக்கு வழங்கிய விருது தான்.

[1972 மார்ச் 27

திரு. எம். தேவராசன் : இந்த விருது பெற்றவர்கள் இறந்த பிறகு போஸ்துமஸ் அவார்டு கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலிலேயே சொன்னேன். போலீசுக்கு வழங்கப்பட்ட விருதுகள் பற்றிச் சொல்லும்போதே சொன்னேன். இறந்துவிட்டால் மனைவியிடத்தில் அந்தப் பதக்கம், விருதுகள் வழங்கப்படுகின்றன.

திரு. நா. வீராசாமி : இப்படிப்பட்ட பரிசுகள் தண்ணீரில் மூழ்கி இருந்தவர்களைக் காப்பாற்றினார்கள் என்பதற்காக வழங்கப் பட்டதாகச் சொன்னார்கள். சென்னை நகரில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் உள்ளே தீரத்துடன் நுழைந்து குழந்தைகளை எல்லாம் வெளியே கொண்டுவந்து காப்பாற்றுகிறார்கள். வீடு எரிவது தெரியாமல் தூங்கிக் கொண்டிருக் கின்றவர்களையும் இப்படி உள்ளே நுழைந்து காப்பாற்றுகின்ற தீரர் களுக்கு இப்படிப்பட்ட பரிசு வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுடைய பெயர்கள் அறிவிக்கப்பட்டு நிரூபிக்கப்படுமானால் அவர்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : வைகை ஆற்றில் வெள்ளம் வந்த போது 26 வயது வாலிபர் காத்தான் என்பவர் பல உயிர்களைக் காப்பாற்றியதற்காக இதுவரை இந்த மாதிரியான பதக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை. நடப்பு ஆண்டிலாவது கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெரியாருடைய மிகச்சிறந்த தொண்டன் என்று சொல்லப்படுகின்ற அந்தக் காத்தானுக்கு வருகிற ஆண்டு அப்படிப்பட்ட பதக்கம் வழங்கப்பட வேண்டுமென்று அரசு சிபாரிசு செய்யும்.

தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களின் பங்கு.

* 720 வினா: திரு. சு. துரைசாமி
திரு. ஏ. சுவாமிதாஸ்
திரு. தோப்பூர் திருவேங்கடம் : } மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிற்சாலைகள் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கு பங்கு தரும் திட்டம் தமிழ்நாட்டில் எந்த அளவு நடை முறைக்கு வந்துள்ளது?